# தவக்காலம் முதல் வாரம் - ஞாயிறு

# முதல் ஆண்டு

## திருப்பலி முன்னுரை

தவக்காலத்தின் முதலாம் ஞாயிறு பலிக்கு வந்துள்ள உங்களை அன்புடனே வாழ்த்தி வரவேற்கின்றோம்.

அலகையினால் ஆண்டவர் சோதனைக்கு உட்பட்டார் என்பதனை இந்த முதலாம் ஞாயிறு சிந்திக்க இறைவாக்குகள் அழைப்புத் தருகின்றன.

சோதனை எல்லா மனிதருக்கும் தான் எடுக்கின்ற தீர்மானங்களினால் வருகின்றது. சோதனை இல்லாத மனிதர்கள் இல்லை. சோதனையில்லாத மனித வாழ்வும் இல்லை. இத்தகைய சோதனைகளில் தளர்ந்து போகாது பயணிக்க துணை செய்வது, இறைவார்த்தையே என்பதனை தன் வாழ்வின் வழி நமக்கு கற்றுத் தருகின்றார்.

தவக்காலத்தில் இறைவார்த்தையை வாசிப்போம், யோசிப்போம், அதனையே கேடயமாக்கி சோதனைகளை வெல்வோம் என்ற உறுதிப்பாட்டோடு பலியிலே பங்கேற்று பயன்பெறுவோம்.

## மன்றாட்டுகள்

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. திருஅவை சந்திக்கின்ற சோதனைகளை நீவீர் அறிவீர். உம் ஆவியின் துணை தந்து காத்திட அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. எதிர்நோக்கி உள்ள எம் பாராளுமன்ற தேர்தல் சந்திக்கின்ற சோதனை சவால்களை சந்திக்க உம் ஆவியின் அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. வாழ்வில் சந்திக்கின்ற சோதனைகளில் துவண்டு போகாமல், தளர்வு அடையாமல், இறைவார்த்தையில் ஊறி வளர்ச்சி, வாழ்வு காண அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. அலகையின் ஏமாற்று தந்திரங்களுக்கு அடிமையாகிப் போகாமல், இறுதிவரை மன உறுதிப்பாட்டோடு பயணிக்க அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

5. அறிவியல் வளர்ச்சி தருகின்றவைகளில் எச்சரிக்கையோடு இருந்து, புதிய வழிவகைகளில் எழும் சோதனைகளை விவேகத்தோடு எதிர்கொண்டு யதார்த்த உணர்வுகளோடு வாழ்ந்திட அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**"கடவுள் அன்பாய் இருக்கிறார்!" 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 843 802 1938; www.arulvakku.com